ஶ்ரீ:

ஶ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஶ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ரு'தி$_3$ ॥

நம்மாழ்வார் அருளிச்செய்த

# ॥ ஆடியாடி ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஶ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ ஆடியாடி ॥

தலிவியின் ஆற்றாமை கண்ட தாய் தலிவனை நோக்கிக் கூறல்

‡ஆடியாடி⋆ அகம் கரைந்து⋆ இசை
பாடிப் பாடிக்⋆ கண்ணீர் மல்கி⋆ எங்கும்
நாடி நாடி⋆ நரசிங்கா! என்று⋆
வாடி வாடும்⋆ இவ்வாணுதலே (1)

வாணுதல்⋆ இம்மடவரல்⋆ உம்மைக்
காணும் ஆசையுள்⋆ நைகின்றாள்⋆ விறல்
வாணன்⋆ ஆயிரம் தோள் துணித்தீர்⋆ உம்மைக்
காண நீர்⋆ இரக்கம் இலீரே (2)

இரக்க மனத்தோடு⋆ எரியணை⋆
அரக்கும் மெழுகும்⋆ ஒக்கும் இவள்⋆
இரக்கம் எழீர்⋆ இதற்கென் செய்கேன்⋆
அரக்கன் இலங்கை⋆ செற்றீருக்கே (3)

இலங்கை செற்றவனே என்னும்⋆ பின்னும்
வலங்கொள்⋆ புள் உயர்த்தாய் என்னும்⋆ உள்ளம்
மலங்க⋆ வெவ்வுயிர்க்கும்⋆ கண்ணீர் மிகக்
கலங்கிக்⋆ கை தொழும் நின்றிவளே (4)

இவள் இராப்பகல்⋆ வாய்வெரீ இ⋆ தன
குவளை ஒண்⋆ கண்ண நீர் கொண்டாள்⋆ வண்டு
திவளும்⋆ தண்ணந் துழாய் கொடீர்⋆ என
தவள வண்ணர்⋆ தகவுகளே (5)

தகவுடையவனே என்னும்⋆ பின்னும்
மிக விரும்பும்⋆ பிரான் என்னும்⋆ என-
தக உயிர்க்கு⋆ அமுதே என்னும்⋆ உள்ளம்
உக உருகி⋆ நின்றுள் உளே (6)

www.prapatti.com

உள்ளுள் ஆவி⋆ உலர்ந்துலர்ந்து⋆ என
வள்ளலே⋆ கண்ணனே என்னும்⋆ பின்னும்
வெள்ள நீர்க்⋆ கிடந்தாய் என்னும்⋆ என
கள்வி தான்⋆ பட்ட வஞ்சனையே (7)

வஞ்சனே என்னும்⋆ கை தொழும்⋆ தன
நெஞ்சம் வேவ⋆ நெடிதுயிர்க்கும்⋆ விறல்
கஞ்சனை⋆ வஞ்சனை செய்தீர்⋆ உம்மைத்
தஞ்சம் என்று⋆ இவள் பட்டனவே (8)

பட்ட போது⋆ எழு போதறியாள்⋆ விரை
மட்டலர்⋆ தண் துழாய் என்னும்⋆ சுடர்
வட்ட வாய்⋆ நுதி நேமியீர்⋆ நும-
திட்டம் என் கொல்⋆ இவ்வேழைக்கே (9)

ஏழை பேதை⋆ இராப் பகல்⋆ தன
கேழில்⋆ ஒண் கண்ண நீர் கொண்டாள்⋆ கிளர்
வாழ்வை வேவ⋆ இலங்கை செற்றீர்⋆ இவள்
மாழை நோக்கு⋆ ஒன்றும் வாட்டேன்மினே (10)

‡வாட்டமில் புகழ்⋆ வாமனனை⋆ இசை
கூட்டி⋆ வண் சடகோபன் சொல்⋆ அமை
பாட்டு⋆ ஓர் ஆயிரத்திப் பத்தால்⋆ அடி
சூட்டலாகும்⋆ அந்தாமமே (11)

‖ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ‖

www.prapatti.com